செய்தி வெளியீடு எண் .11/2021 நாள்: 19.06.2021

**செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் – சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சா. விஜயராஜ்குமார். இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு**

சென்னைக்கு அருகே செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சென்னை மாநகரம் மற்றும் விரிவாக்கப்பட்ட சென்னை புறநகரின் பிற பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிட தொய்வு நிலையிலுள்ள குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகளை விரைவுபடுத்தி நிறைவுசெய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சா. விஜயராஜ்குமார். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்ய செம்பாரம்பாக்கத்தில் 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட சுத்திகரிப்பு நிலையம், 2008 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த குடிநீர் நிலையத்திலிருந்து, தற்பொழுது நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர், தென்சென்னை மற்றும் மத்திய சென்னை பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

<u>கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர்</u>

சென்னை மாநகர மக்களின் கூடுதல் தேவைக்கும், சென்னை நகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் நிறைவு பெற்றுள்ள குடிநீர் திட்டப் பணிகளுக்கு குடிநீர் வழங்கிடவும் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மி.மீ விட்டம் கொண்ட இரும்பு பிரதான குழாய் பதிக்கும் பணிக்கான ஒப்பந்தபணியாணை 2013 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு, குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வந்தது. மிக அதிக காலதாமதம்

காரணமாக மேற்கூறிய ஒப்பந்தம் 12.03.2019 அன்று ரத்து செய்யப்பட்டது. நடைபெற்று முடிந்த பணியில் மீதமுள்ள 1780 மீ. நீளமுள்ள குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு தற்பொழுது ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

மேலாண்மை இயக்குநர் நேரில் ஆய்வு

இந்த பணிகள் நடைபெறவிருக்கும் இடங்களை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சா. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்கள் நேரில் இன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பூந்தமல்லி நெடுஞ்சாலை சுத்திகரிப்பு நிலையத்திலுந்து சவிதா பல்மருத்துவ கல்லூரிக்கு இடையிலான மீதமுள்ள குழாய் பதிக்கப்படவுள்ள 6 இடங்கள் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலை மேம்பாலத்திற்கு அடியில் பிரதான குழாய் குறுக்கே கடக்கும் இடத்தில் பள்ளம் இல்லாமல் சுரங்கம் அமைத்து குழாய் பதிக்கும் பணிகளுக்கான இடங்களையும் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடித்திட அறிவுறுத்தினர்.

19 லட்சம் மக்கள் பயன் பெறுவர்

இந்தப் பணிக்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு அடுத்த ஆண்டு 2022 ஆகஸ்டு மாதத்திற்குள் பணிகள் முடிக்க திட்மிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கோயம்பேடு, விருகம்பாக்கம், வடபழனி, ஆலந்துார், மேற்குமாம்பலம், சைதாப்பேட்டை, பரங்கிமலை, சாலிகிராமம், வேளச்சேரி, நந்தனம், மயிலாப்பூர், கோடம்பாக்கம் பல்லாவரம், பம்மல், அனாகபுத்துார், குரோம்பேட்டை போன்ற பகுதிகளுக்கு குழாயின் மூலம் கூடுதலாக குடிநீர் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், மத்திய சென்னை, தென்சென்னை மற்றும் சென்னை விரிவாக்கப்பட்ட புறநகர் பகுதிகளில் உள்ள சுமார் 19 லட்சம் மக்கள் பயனடைவர்.

இந்த ஆய்வின்போது வாரிய செயல் இயக்குநர் திரு, ப. ஆகாஷ், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு. கு. மதுரைநாயகம், தலைமைப்பொறியாளர் திரு. சா. சமிலால் ஜான்சன், மேற்பார்வை பொறியாளர் திரு. இரா. சிவமுருகன் மற்றும் மூத்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்